**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 184/2023**

**Prosecution witness : அ.சா.1** **Date : 24.09.2025.**

| | |
|---|---|
| **Name : அனிதா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் கோம்புரான்காட்டில் குடியிருந்து மளிகை கடை வைத்துள்ளேன். கடந்த 12.09.2022 ம் தேதி காலை 10.50 மணிக்கு என் தங்கை கிருத்திகாவின் 9360475636 செல்போனுக்கு மற்றொரு செல்போனிலிருந்து போன் செய்து நான் அபிமன்யு பேசுகிறேன். என்னுடைய மாமா மற்றும் ராஜா குடும்பத்தாரையும் கொலை செய்யாமல் விடமாட்டேன் என்றும் என் அண்ணன் லல்லுபிரசாத் என்பவரை பற்றி எனக்கு தெரியாதா என்று பேசியதாக என் தங்கை என்னிடம் சொன்னார். சம்பவ சமயம் நான் 8 மாத கர்பிணியாக இருந்தேன். கடந்த 15.09.2022 ம் தேதி காலை 6.30 மணியளவில் நான் என் இரு சக்கர வாகனத்தில் பால் வாங்க கடைக்கு செல்வதற்காக சென்ற போது நான்கு ரோடு அருகில் உள்ள நாகர்கோவில் அருகில் போன போது எனக்கு எதிரே அப்பாச்சி கருப்பு கலர் இரு சக்கர வாகனத்தை குருவி என்கிற கிருஷ்ணமூர்த்தி மற்றும் அவருக்கு பின்னால் அபிமன்யு இருவரும் வந்தனர்.

2) அதில் குருவி என்கிற கிருஷ்ணமூர்த்தி நான் ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தை எட்டி உதைத்ததில் நான் கீழே விழுந்தேன். இரண்டு எதிரிகளும் கத்தியை எடுத்து வந்து என்னை கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்கள்.

இது சம்மந்தமாக 21.09.2022ம் தேதி கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். சம்பவத்திற்கு பிறகு காவல் நிலையம் சென்றேன். போலீசார் என்னை விசாரித்து அனுப்பினார்கள். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியும். இன்று நீதிமன்றத்தில் குருவி (எ) கிருஷ்ணமூர்த்தி ஆஜராகியுள்ளார். மற்றொரு எதிரியை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். அவர் சிறுவர் என்பதால் சிறுவர் நீதிமன்றத்தில் அடையாளம் காட்டி சாட்சியம் அளித்தேன். புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை– </u>இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**